

# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## புதுவழி திறக்கும் நம் ஆண்டவர்!

**பு**திய வழி திறக்கும், புதிய உடன்படிக்கையின் புத்தக சுருள் இயேசுவிடம் கொடுக்கப்பட்டது! அதில் "காணிக்கை, பலி" என்ற அத்தியாயத்தை இயேசு திறந்து பார்த்தார்! அந்த புத்தக சுருளில், அவர் கண்டது என்ன? பழைய ஏற்பாட்டின்படியான 'தசமபாகம்' என்ற பக்கம், எதுவும் எழுதப்படாமல் வெறுமையாயிருந்தது! அடுத்ததாக 'பலி' என்ற பக்கமும் வெறுமையாயிருந்தது! அதை அடுத்து, 'காணிக்கை' என்ற பக்கமும் வெறுமையாயிருந்தது! அடுத்த பக்கத்தில் "தன்னைக் குறித்து எழுதியிருப்பதைக் கண்டு" இயேசு வியந்தார்! பழைய ஏற்பாட்டின் தசமபாகம், காணிக்கை, பலி ஆகிய தனக்கு வெளியே உள்ள ஒன்றையும் விரும்பாமல், "தன்னையே அல்லது தன் முழு சரீரத்தையே" புதிய உடன்படிக்கையில் பிதாவானவர் விரும்புகிறார்! என இயேசு கண்டார். 'உடனே' இதோ, உம் சித்தத்தின்படி செய்ய வருகிறேன்! எனக்கூறி, முதலாவதை நீக்கிப் போட்டு, இரண்டாவதை நிலைநிறுத்தினார். அல்லேலூயா! (எபிரெயர்10:7-9).

இந்த புதுவழியே இப்போது, நமக்குள் மலர்ந்திட வேண்டும்! பிதாவின் சமூகத்தை மறைக்கும் நம் சுயத்தை, இயேசுவே தன்னில் ஏற்று, "சுயத்தை" சிலுவையின் வழியில் அழித்து பிதாவின் சமூகம் கிட்டிச் சேர நம் யாவரையும் ஆண்டவர் நடத்துகிறார்! 'அவர் சமூகத்தில்' நித்திய பேரின்பமும், பூரண ஜெயமும் உண்டு!

*-tr*

பெட்டகம் 39 அக்டோபர் 2023 பரல்கள் 10



# புறம்பான அழகா? தேவ சாயலா?

அதிகமான பணம், நேரம் செலவழித்துத் தங்களைச் சிங்காரித்துக் கொள்வதில் ஆண்களைவிடப் பெண்கள்தான் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். தற்போது எங்கு பார்த்தாலும் "Beauty Parlours" (அழகு ஒப்பனை நிலையம்) மிகுந்து விட்டன. அது ஒரு பெரிய சேவைத் தொழிலாக நடைமுறையில் வந்து விட்டது!

தேவனாகிய கர்த்தர் அண்ட சராசரங்களையும் அதில் உள்ள அனைத்து ஜீவராசிகளையும் ஒரு வார்த்தையில் படைத்தார். ஆனால் மனிதனை மட்டும் 'சிறப்பான' தனிப்பட்ட முறையில் சிருஷ்டித்தார். ஆதி.12:26,27-ன்படி தமது சாயலாகவும் தமது ரூபத்தின்படியும் மனுஷனை உண்டாக்கினார் என்று பார்க்கிறோம். **தேவ சாயல் என்பதும் தேவ ரூபம் என்பதும் எத்தனை இயற்கையான பூரண அழகு** என்பதை யோசித்துப் பாருங்கள்!

அதற்காக, ஏனோ தானோவென்று உடை உடுத்தி, சுத்தமில்லாத அழுக்காடையோடு காணப்பட வேண்டுமென்பதில்லை! பொது இடங்களில் மற்றவர்கள் முன்பு கண்ணியமாகத் தோற்றமளிக்க வேண்டும். அது, கிறிஸ்தவ பண்பு!

"அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்பது முதுமொழி. இருதயம் தேவனுக்கு முன்பாக நேர்மையாக இருக்கும்போது, வெளித்தோற்றத்திலும் தானாகவே மாறுதல் உண்டாகும்.

இயேசு அங்கீகரிக்கும் வகையில் அவரை முன் மாதிரியாக வைத்து வாழ்வதே, அவரது சாயலை உள்ளும் புறம்பும் தரித்துக் கொள்வதற்கு அடையாளம்!

*-Ed*


**2024 'பரலோக பொக்கிஷங்கள்' – வருட சந்தா ரூ.170.00**

ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.**140.00** அனுப்புங்கள். அயல்நாடு ஒரு பிரதி ரூ.**900/-** அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள் **'புதிது'** என்று குறிப்பிடவும். நன்றி!

ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!
சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!

வங்கி கணக்கு: MADURAI CHRISTIAN FELLOWSHIP, Indian Bank - Koodal Nagar Branch
A/c No: **502087685** IFSC Code: IDIB000K150
(பின்பக்கம் உள்ள **QR** கோடு மூலமும் அனுப்பலாம்)
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)



கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள் 207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India Cell : 9843049935 Ph (O) 0452 - 3585200
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : paralogapokkishangal

## கிறிஸ்தவனே! உன் விசுவாசம் 'உயிருக்கு' ஒப்பானது!

*'இழந்த விசுவாசத்தை' மீட்பது நம் கடமை*

ஒரு கிறிஸ்தவனின் விசுவாசம் எவ்வளவு விலையேறப் பெற்றது என்பதை, சீமோன் பேதுருவைப் பார்த்து "நானோ **உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு** உனக்காக வேண்டிக் கொண்டேன்" என இயேசு கூறிய வாசகத்திலிருந்து நாம் தெளிவாக விளங்கிக்கொள்ள முடிகிறது (லூக்.22:32). ஒ கிறிஸ்தவனே, உன் விசுவாசத்தை மிகுந்த கவனத்தோடு பேணி பாதுகாத்துக்கொள்! எங்கேயாவது உன் விசுவாசத்தை இழந்திருந்தால் 'அந்த விழுந்த இடத்திற்குச் சென்று' மீண்டும் 'இழந்த விசுவாசத்தை' கருத்துடன் தேடி பெற்றுக் கொள்ளாதபட்சத்தில், கர்த்தருடைய ஆசீர்வாதங்கள் உனக்கு கிடைக்காது! நீங்கள் எத்தனை ஜெபித்தாலும், அந்த உங்கள் ஜெபம் மாத்திரமே தேவனுடைய சிங்காசனத்திலிருந்து உங்களுக்குப் பதில் கொண்டுவர இயலாது. ஆம், "**விசுவாசிக்கிற ஒரு மனுஷனின்** ஜெபத்தை சார்ந்தே" பதில் கிடைக்கும்.

**விசுவாசமானது, உடனடி தகவல் கொடுக்கும் 'தந்தி கம்பியைப்போல்' பூமியிலிருக்கும் ஒருவனை பரலோகத்துடன் இணைக்கிறது. அது, நாம் அழைப்பதற்கு முன்பே துரிதமாய் தேவனுடைய அன்பின் விடையை நமக்கு கிடைக்கச் செய்கிறது. ஆனால் இவ்வித 'தந்தி கம்பியின்' உறவாகிய விசுவாசம் துண்டிக்கப்பட்டுவிட்டால், பரத்தின் வாக்குதத்தத்தில் யாதொன்றும் நமக்கு வந்து சேராது!**

சூழ்நிலை பாதிப்பால் என் உள்ளம் சஞ்சலப்படுகிறதோ? அந்த சஞ்சலத்திற்கு ஏற்ற உதவியை, என் **விசுவாசத்தின் மூலமாய்** பெற்றுக்கொள்ள முடியும்! சத்துருவால் தாக்கப்பட்ட துயரமோ? அந்த துயரத்தில், என் ஆத்தும நேசரின் அடைக்கலத்தின் மீது சாய்ந்து கொள்ள **அந்த விசுவாசமே** உதவி செய்கிறது! இத்தனை அருமையான விசுவாசம் என்னிடமிருந்து தொலைந்து போனால், இனி நான் எத்தனை முறை தேவனை நோக்கி கூப்பிட்டாலும் அது, வீணான சத்தமாகவேயிருக்கும். என் ஆத்துமாவிற்கும் பரலோகத்திற்கும் உள்ள நேரான தொடர்புக்கு மாறாக, 'குறுக்குச்

*சாலை' எதுவுமே கிடையாது. ஆகவே, பரத்தின் ராஜபாதையில் தடை ஏற்பட்டு விட்டால், பரலோகத்தில் வீற்றிருக்கும் ராஜாதி ராஜாவை நான் சந்திக்க முடியாதே?*

*தேவத்துவத்தின் அனைத்திற்கும் 'விசுவாசமே' தொடர்பை இணைத்து தருகிறது. உன்னத தேவனின் வல்லமையை 'விசுவாசமே' என்னை உடுத்துவித்து அலங்கரிக்கிறது. விசுவாசமே 'பாதாளத்தின் வாசலையும்' எதிர்கொண்டு ஜெயித்திடச் செய்கிறது! திரளான சத்துருக்கள் தோன்றினாலும், அவர்கள் ஒவ்வொருவரின் கழுத்தையும் தரையில் மிதித்துச் செல்ல 'விசுவாசமே' எனக்கு உதவி செய்கிறது. இத்தனை அருமையான பங்கு எனக்கு இருந்தபோதிலும் "என்னிடத்தில் விசுவாசம் இல்லையென்றால்" கர்த்தாதி கர்த்தாவிடமிருந்து யாதொன்றைப் பெற்றிட என்னால் எப்படி முடியும்?*

**காரியம் இப்படியெல்லாம் இருக்கிறபடியால் 'ஓ கிறிஸ்தவனே' இத்தனை அருமை பெருமையான உன் விசுவாசத்தை, உன் ஜீவனுக்கு ஒப்பாக காத்துக்கொள்! உன்னால் விசுவாசிக்கக் கூடாது போனால், விசுவாசிக்கிற வர்களால் எல்லாம் கூடும்! என்ற சத்தியத்தை அறிந்து கொள்வாயாக!**

*தன் கண்களுக்கு புலப்பட்ட வலிமையான 'கிரியை செய்திட முயற்சிப்பவர்கள்' விசுவாசத்தைக் காட்டிலும் (விசுவாசத்தை ஒரு பொருட்டாய் எண்ணாமல்) மேலான நிச்சயத்தை அடையலாம் என எண்ணி மேன்மை பாராட்டுகிறார்கள். ஆனால் பவுல் குறிப்பிடும்போது,* "**விசுவாசத்தை சார்ந்தவர்களுக்கே** *அந்த வாக்குதத்தம் நிச்சயமாய் இருக்கிறது" என திட்டமாய் கூறினார் (ரோமர் 4:16).*

*உண்மைதான், விசுவாசம் தேவனை கனப்படுத்துகிறது! தேவன் விசுவாசத்தை கனப்படுத்துகிறார்!*

*- Mrs.சார்லஸ் கெளவ்மென்*

---

## அண்டிவரும் சிட்சையும் உபத்திரவமும் தேவ கிருபையே!

*கிருபை இழந்திடும் தருணம், கசப்பின் வேர் எழும்பும் அபாயம்*

*எபிரெயர் 12:6-11 வசனங்களில் 'சிட்சை' என்ற வார்த்தை கூறப்பட்டிருப்பதைக் காண்கிறோம். சிட்சை என்ற பதத்தை நாம் யாவருமே மகிழ்ச்சியாய் உணர்வதில்லை! தேவன் நமக்கு அருளித் தரும்* **அவரது கிருபைக்கு இணையாய் சிட்சையை 'நன்மை' என** *ஏற்றுக் கொள்ள அனேகர் தயங்குகிறார்கள். நாம் எதிர்பாராத நேரத்தில் தான் சிட்சை ஏற்படுகிறது! ஆகவேதான், சிட்சையின் மூலமாய் அவர் அருளித்தரும் கிருபைக்கு புறமுதுகு காட்டும் அபாயத்தில்*

*இருக்கிறோம். அதனிமித்தமாய், நம்முடைய இரட்சிப்பிற்கும், நாம் மகிமையடைவதற்கும் தேவன் அனுப்பிய சந்தர்ப்பத்தை அசட்டை செய்தவர்களாய் மாறுகிறோம்! நம்முடைய 'நன்மைகென்று' செயல்படுவதற்காகவே இவ்வாறு அவர், நமக்கு திட்டமிட்டு தீர்மானிக்கிறார்!*

**அவர் நமக்கு திட்டமிட்டு சம்பவிக்கும் அனைத்துமே (சிட்சையும், உபத்திரவமும்கூட), மெய்யாகவே தேவனுடைய கிருபையாய் இருக்கிறது!**

*தாவீதின் ஜீவியத்தில் ஏற்பட்ட பல்வேறு துன்பமான சூழ்நிலைகளில், தன்னை அவன் உத்தமமான தேவனுடைய ஊழியனாய் நிரூபித்து காண்பித்தார். மெய்யாகவே, அந்த துன்பங்கள் யாவும்* **தேவனுடைய கிருபையாய்** *அவருக்குச் சொந்தமானது! அதனிமித்தமாய் தாவீது அவைகளை ஏற்று ருசித்தார். அதுபோலவே, யோசேப்பும் ஏராளமான உபத்திரவங்களைக் கடந்து, தாவீதைப்போலவே தேவ மகிமையில் பங்குபெற்றான்! ஆகவேதான், தாவீதைக் குறித்தும் யோசேப்பைக் குறித்தும் நாம் மகிழ்வுடன் வாசித்து, அவர்களை நம் பிள்ளைகளுக்கும் எடுத்துக் கூற முடிகிறது!*

*இந்த தேவதாசர்கள், 'சிட்சைகளையும் உபத்திரவங்களையும்' கடந்து வராதிருந்தால், அவர்களைக் குறித்து சொல்வதற்கு எதுவுமே நமக்கு இருந்திருக்காது. உபத்திரவங்களில் யோசேப்பு மனம் கசந்து நடந்திருந்தால், யோசேப்பின் சரித்திரத்தை ஒரு சிறந்த போதனையாய் நாம் வாசித்திருக்க முடியுமா?*

**ஒருவேளை அவர்கள், உபத்திரவத்தின் தருணத்தில் தோல்வி அடைந்திருந்தால் எபிரெயர் 12:15-ம் வசனம் கூறுகிறபடி, அவர்கள் தேவனுடைய கிருபையை இழந்திருப்பார்கள்!**

*இந்த வசனம் மேலும் கூறும்போது, தேவனுடைய கிருபையை இழந்த அந்த நபர் யாராயிருந்தாலும் இப்போது 'கசப்பினால் நிறைந்து' அந்த கசப்பு அநேகரை தீட்டுப்படுத்தி கலக்கத்தையும் உண்டுபண்ணும் என வாசிக்கிறோம். அவர்களின் கசப்பான வார்த்தைகளை, மற்றவர்கள் விரும்பி கவனிப்பார்கள்! அவரிடமிருந்து முளைத்த 'கசப்பின் ருசியை' மற்றவர்கள் ஏன் சோதித்துப் பார்த்து, 'அது தீமையென' தள்ளியிருக்கலாமே! அவ்வாறு ஏன் சோதித்தறியவில்லை? ஆம், பகுத்தறியத்தக்க தங்கள் உணர்வுகளைக் கொண்டு இவர்கள் பயிற்சி செய்து கண்டறிய பழகவில்லை (எபிரெயர் 5:14).*

**யாதொருவர் உங்களிடம் வந்து, யாரோ சிலரைக் குறித்து தீமையாய் பேசும்போது, அவர்களுடைய பேச்சில் 'அன்பின் வாசனை' இல்லை என்பதை உங்களால் பகுத்தறிந்து உணர முடிந்ததா?**

இவ்வாறு உங்கள் உணர்வுகளைக் கொண்டு பகுத்தறிந்து "சகோதரரே, நீங்கள் மனம் புண்பட்டபடியால் இவ்வாறு பேசுகிறீர்கள்!" என்றோ, அல்லது 'சகோதரரே, நீங்கள் கோபமாக இருக்கிறீர்கள் என்றோ' நீங்கள் பகுத்தறிந்து கூறினால், கசப்பைக் கொண்டு வந்த சகோதரன் உங்களை விட்டுப் போய்விடுவாரல்லவா? உங்களை விட்டுப்போன அந்த சகோதரன் 'தன் குற்றச்சாட்டுகளை' தவறான நபரிடத்தில் கொண்டு வந்ததாகவே உணருவார். **பகுத்தறியும் உணர்வை உபயோகித்துப் பழகாதவர்கள், எளிதில் தீட்டுப்படுவார்கள்!** இதன் விளைவாய் இளைப்பாறுதலற்ற கலக்கம் அவர்களுக்கு நேரிடும்.

மனுஷருடைய இருதயத்திலிருந்து புறப்படும் பொல்லாத வைகளைக் குறித்து மாற்கு 7:20-23 வசனங்கள் கூறுகிறது. அதை நீங்கள் வாசிக்கும்போது, இந்த பொல்லாத தீமைகளில் 'மதிகேடு' கடைசி பகுதியாய் கூறப்பட்டிருப்பதை நாம் காண்பது ஆச்சரியமாய் இருக்கிறது. மற்ற பொல்லாத குணங்கள் அனைத்தையும் 'மோசமானவை' என நாம் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் "**மதிகேடும் பொல்லாத பாவம்தான்!**" என, நம்மில் அனேகர் புரிந்து கொள்ள முடியவில்லை! அதுஏனென்றால், அந்த நபருக்கு 'நல்ல புரிந்து கொள்ளுதல்' இல்லை என்பதுதான். இதற்கு மாறாக, அந்த நபரிடத்தில் **தெய்வ அன்பு குடியிருந்தால்** காரியத்தை தெளிவாய் புரிந்து கொண்டிருப்பார். ஆகவே அவர் மதிகேடனாயும் இருக்க மாட்டார்!

'கசந்த குணம்' எவ்வாறு அவர்கள் இருதயத்திற்குள் பிரவேசித்தது? எங்கிருந்து இந்த தீய குணம் உருவாகியது? மாம்சத்தின் இச்சைகளில் இருந்தே இந்த கொடிய **கசப்பின் வேர்** முளைக்கத் தொடங்கியது. நாம் அனைவருமே 'நம் சொந்த இச்சைகளால்' சோதிக்கப்படுகிறோம்!

**இச்சமயங்களில்தான், நம்முடைய இருதயத்தை சுத்தமாய் காத்துக் கொள்ள வேண்டியது மிக முக்கியமாகும்! நாம் ஒருபோதும் கசப்பினால் நம் இருதயம் தீட்டுப்பட அனுமதித்துவிடக் கூடாது.**

நம்முடைய சிறு பிள்ளைகளுக்கு நாம் பொதுவாய் கற்றுக்கொடுக்க விரும்பும் முதல்பகுதி 'பிள்ளைகள் தங்களைத்தாங்களே சுத்தமாய் வைத்துக்கொள்ள' கற்றுக்கொடுப்பதுதான். ஆகவே ஒரு பிள்ளை, இரண்டு அல்லது மூன்று வயதுக்குப் பிறகும் தன்னை சுத்தமாக வைத்துக்கொள்ள கற்றுக்கொள்ளாதிருந்தால், பெற்றோர்கள் அதைக்குறித்து வருத்தமடையத் தொடங்குவார்கள்! காரியம் இவ்வாறாயிருக்க, ஒரு விசுவாசி ஐம்பது வயதை தாண்டியும் இன்னமும் தன்னை சுத்தமாய் வைத்துக்கொள்ள கற்றுக்கொள்ளாதிருந்தால், அது எத்தனை பரிதாபம்!

*நமக்குள் இருக்கும் தெய்வ பயமே, நம் இருதயத்தை எவ்வாறு பரிசுத்தமாய் காத்துக்கொள்ள வேண்டும்? என போதிக்கிறது.*

**ஒரு சோதனை வரும்போதுதான், நாம் தேவனுக்கு முன்பாக நிற்கிறோமா? அல்லது மனுஷனுக்கு முன்பாக நிற்கிறோமா? என்ற நம் நிலையை வெளியரங்கமாக்குகிறது!**

*யூத மக்களைக் குறித்து ஏசாயாவில் கர்த்தர் கூறும்போது "இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னை கனம் பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது; அவர்கள் எனக்குப் பயப்படுகிற பயம்* **மனுஷராலே போதிக்கப்பட்ட** *கற்பனையாயிருக்கிறது" என கூறினார் (ஏசாயா 29:13). அதாவது தேவன் "நானே கர்த்தர்" எனக்கூறியதை தேவன் வழங்கிய கற்பனையாக அவர்கள் காண்பதில்லை. அவர்களுக்கு, இவ்வளவு வலிமையான "நானே கர்த்தர்" என்ற கற்பனையை மிக சாதாரணமாக ஒரு 'மனுஷனுடைய கற்பனையைப்போல்' எண்ணிக்கொண்டார்கள்! இவ்வாறாகவே,* **தேவனுடைய எல்லா கற்பனைகளையும் "மனுஷருடைய கற்பனைகளாய்" எண்ணி விட்டார்கள்!** *ஆகவே கற்பனைகளை தெய்வ பயத்தோடு நம் இருதயத்தில் பெற்றுக் கொண்டு வாழ நாம் போதிக்கப்படவில்லையென்றால், நம்மை பரிசுத்தமாய் ஒருபோதும் காத்துக்கொள்ள முடியாது. ஆகவே நீங்கள் யாவரும் மெய்யாகவே* **தேவனுக்குப் பயந்து வாழுங்கள்** *என்றே புத்தி சொல்லுகிறேன். அப்போது மாத்திரமே ஒவ்வொரு சோதனை நேரத்திலும், ஒவ்வொரு துன்ப நேரத்திலும், நம்மை நாமே சுத்தமாய் காத்துக்கொள்ள முடியும்!*

*- ஸிகார்ட் பிராட்லி*

---

## தேவசித்தம் நிறைவேற்ற வாஞ்சிக்கும் அவரது சபை!

*'அவர் வாசம் செய்திடும் சபையில்' நாமிருப்போமாக*

*இந்த உலக சரித்திரத்தில்.... "தேவனுடைய திவ்ய சித்தத்தை நிறைவேற்றத் தவறிய எந்த ஒரு சபையையும் தேவன் விட்டு வைக்காமல், அவைகளைப் புறக்கணித்து கைவிட்டார்" என்றே நாம் இன்றுவரை காண்கிறோம்.*

*பாவ மாந்தர்கள் நிறைந்த உலகில், கிறிஸ்துவின் மறுரூபமடையச் செய்திடும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கத் தவறிய அல்லது தேவ சித்தத்தை நிறைவேற்றத் தவறிய ஊழிய மாந்தர்கள்..... தங்கள் நீண்ட அங்கியை வைத்தோ, பளபளக்கும் தங்கமுலாம் சிலுவையை வைத்தோ, அல்லது தங்களின் நீண்ட வேத கலாச்சாலை பட்டங்களை*

*வைத்தோ, தேவனுடைய மனதை கவர்ச்சிக்க இயலாது! என்பதை, திட்டமாய் அறிந்து கொள்வார்களாக!!*

**20 அல்லது 30 ஆண்டுகளுக்கு முன்பு யாரை தேவன் எழுப்பினாரோ, அவர்கள் கிருபை மிகுந்த தேவ சித்தத்தில் நிலைகொள்ளாமல், கர்த்தரை உத்தமமான விசுவாசத்திலும், அன்பிலும், தாழ்மையிலும் தொடர்ந்து பின்பற்றவில்லையென்றால்.... அவர்களையும் தேவன் புறக்கணித்திட தயங்கமாட்டார். நான் இங்கு வேதனையுடன் குறிப்பிடுவது எந்த ஒரு தனி நபரையும் அல்ல! சபை என்ற பெயரில் கூடியிருக்கும் கூட்டத்தைப் பார்த்தே பேசுகிறேன்!**

*'நாம் இப்பொழுது ஒரு பெரிய கூட்டமாய் சேர்ந்து விட்டோம்' என நீங்கள் கூறிக்கொள்வதெல்லாம், தேவனுக்கு முன்பாக எடுபடாது. அவர் தமது ஆசீர்வாதத்தை திருப்பிக்கொள்வார். எங்கோ இருக்கும் நல்ல இருதயம் கொண்ட ஜனங்களை நாடிச் செல்வார்! யார் அவர்கள்? தேவனை தீராத அன்பினால் நேசிப்பதையும், அவருடைய கற்பனைகளுக்கு கீழ்படிவதையும் மிகப் பெரிய சொத்தாய் கண்டடைந்தவர்கள்!*

*விசுவாசிகளாயிருக்கும் தன்னுடைய பிள்ளைகளை தேவன் ஒருபோதும் புறக்கணிக்கமாட்டார் என நான் அறிந்திருக்கிறேன்! ஆகிலும், தன்னையும் தன் நித்திய வார்த்தைகளையும் புறக்கணிக்கும் சபைகளை விட்டு, தேவன் நிச்சயமாய் தன்னுடைய பிரசன்னமாகிய மேக ஸ்தம்பத்தையும், அக்கினி ஸ்தம்பத்தையும் விலக்கிக் கொள்வார் என, நான் திட்டமாய் அறிந்திருக்கிறதைப் போலவே, நீங்களும் அறிந்து கொள்வீர்களாக!*

*என்னுடைய ஜெபமாயிருப்பதெல்லாம் "பிரியமுள்ள கர்த்தாவே, நான் இருக்கும் இந்த சபையை விட்டு உம்முடைய பிரசன்னத்தை நீர் எடுத்துக் கொள்ள தீர்மானித்திருந்தால், அந்த கொடிய சோகம் நடைபெறும் 24 மணி நேரத்திற்கு முன்பாக, எனக்கு அதை தெரிவியும்! இந்த ஸ்தலத்தை விட்டு வேறு ஒரு ஸ்தலத்திற்குச் செல்வதற்காக 24 மணி நேர அவகாசம் மாத்திரமே கேட்கிறேன்! தேவனே, சபை சீரழிந்து சின்னா பின்னமாவதை, அங்கு நின்று என்னால் காண சகிக்காது!" என்பதாகவே இருக்கும்!*

**பிரியமுள்ள சகோதரரே, நாம் எதை வேண்டுமானாலும் இழக்கத் துணியலாம். ஆனால் அவரது மேகஸ்தம்பமும், அக்கினி ஸ்தம்பமுமாகிய அவரது பிரசன்னத்தை எக்காலத்தும் இழந்துவிடக் கூடாது!**

*அவரது ஷெகினா மகிமை, சுடர்ஒளி பரிசுத்த ஆவியின்*

*வல்லமை கொண்டு, சபையில் எப்போதும் எரிந்து கொண்டேயிருக்க வேண்டும்!* **'தேவன் நம்மோடு இருக்கிறார்' என்ற தொனி மாத்திரமே, நமது ஜெயத்தின் தொனி!** *இந்த சீரான இடத்தைப் பெற்றவர்கள், "எல்லாவற்றையும் இழந்தாலும், ஒரு உத்தம சபையில் தங்கியிருக்கும் பாக்கியத்தை இழந்திட மாட்டோம்!" என்றே அறிக்கை செய்வார்கள். இச்சிக்கப்படத்தக்கவைகளில்,* **ஒரு உண்மை சபையை** *இச்சிப்பதைப் போல் வேறொரு தித்திக்கும் சுவை எங்கும் இல்லை! ஆமென்.*

*- A.W.டோசர்*

---

## தேவனுக்குத் தரும் முதலிடம் மாற்றாத சீஷன்!

*பின்னிட்டு பார்ப்பவன் சீஷன் அல்ல*

*ஒருசமயம் வேதபாரகனொருவன் அவரிடத்தில் தனித்து வந்து: போதகரே,* **நீர் எங்கே போனாலும்** *உம்மைப் பின்பற்றி வருவேன் என்றான். 'வார்த்தைகளை மாத்திரம் பார்த்தால்' நிகரற்ற பிரதிஷ்டைபோல் தோன்றுகின்றன! ஆனால் ஆண்டவரோ, 'அவன் நோக்கத்தை' அறிந்திருந்தார்! அவன் உலகசிந்தையுள்ளவன். கிறிஸ்துவோடு சேர்ந்து கொண்டால், அவர் இராஜ்ஜியத்தில் தனக்கு மேன்மையான பதவி கிடைக்கும் என்று எண்ணி அப்படிச் சொன்னான். அவனைப் பார்த்து: "நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு, மனுஷ குமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை" என்றல்லவா கூறி விட்டார்!*

**ஆண்டவர் கொடுத்த உத்தரவால், அவனுடைய அந்தரங்கம் வெளிப் பட்டது! தன்னை உற்சாகமாய் பிரதிஷ்டை செய்த வேதபாரகன், மறுவார்த்தையின்றி வந்தவழியே திரும்பினான்!**

*அவருடைய சீஷர்களில் வேறொருவன் அவரைப்பார்த்து: ஆண்டவரே, முன்பு நான் போய் என் தகப்பனை அடக்கம் பண்ண எனக்கு உத்தரவு கொடுக்க வேண்டுமென்று கேட்டான். இக்காலத்தில், கிறிஸ்தவர்களாகும்படி விரும்புகிற இந்து சிநேகிதர்கள் சிலசமயம் இதைப்போல் சொல்லுகிறதுண்டு. கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள், தாயாருக்கு ஒன்று ஆனவுடன், அவர்களுக்குச் செய்ய வேண்டிய மரியாதையைச் செய்துவிட்டு, ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுகிறேன் என்பார்கள்! இதுபோலவே அந்த சீஷனும் உத்தரவு கேட்டான்.*

*அவனுடைய தகப்பன் சாகவுமில்லை. மரணப் படுக்கையில் இருக்கவுமில்லை. அவன் எப்போது மரிப்பானோ அதுவும் தெரியாது! ஆகிலும், அதுவரை வீட்டிலிருந்து விட்டு, ஆஸ்திகளைப்*

பாகம் செய்வதில் தனக்கு வரும் பங்கைப் பற்றிக்கொண்டு, பின்பு சாவகாசமாய் அவரைப்பின் செல்லலாமென்பது அவன் நோக்கம்! அவனுடைய மனதின் யோசனையை ஆண்டவர் கண்டார். அவன் வீடு திரும்பினால், குடும்பச்சிக்கல்கள் ஒன்றின்பின் ஒன்றாய் அவனைச் சூழ்ந்து கொள்ளும். அவன் திரும்பிவருவது கூடாதகாரிய மென்று ஆண்டவர் அறிவார்:

**தமது ஊழியத்துக்குப் பிரயோஜனமா யிருக்கக்கூடியவனை இழந்துவிட ஆண்டவருக்கு மனம் வரவில்லை. ஆகையால், மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம் பண்ணிக் கொள்வார்கள், நீ என்னைப் பின்பற்றிவா என்று சொன்னார். இந்த சீஷன் பன்னிருவரில் ஒருவரான பிலிப்பு என்பது சிலருடைய அபிப்பிராயம்!**

வேறொரு சமயம் ஒருவன் அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, நான் உம்மைப் பின்பற்றுவேன், **ஆகிலும் முந்திப்போய்** வீட்டாரை வழியனுப்பிக்கொள்ள உத்தரவு கொடுக்கவேண்டும் என்று கேட்டான். முந்தின இரண்டு மனுஷருடைய குணமும் இவனில் காணப்படுகிறது. வேதபாரகனைப்போல் அவரைப் பின்பற்ற விரும்புகிறான்! ஆகிலும் மற்றவனைப்போல் வீட்டையும் நினைக்கிறான்! வீட்டுக்குப்போய் இன ஜனத்தாரோடு ஆலோசனை செய்தால், அவர்கள் இவனை எளிதில் போகவிடுவார்களோ? பலரும் பலதைச் சொல்லும்போது அவன் தீர்மானம் நிலைக்குமா? **இருமனமுள்ளவன் தன் வழியில் எப்படி நடப்பான்?** ஆண்டவர் அவனுக்குச் சரியான உத்தரவு கொடுத்தார்: "கலப்பையின்மேல் கைவைத்துப் **பின்னிட்டுப் பார்க்கிறவன்** எவனும், தேவனுடைய இராஜ்ஜியத்துக்குத் தகுதியுள்ளவனல்ல" என்றார்.

*எலியா, எலிசாவை* அழைத்தபோது அவன் கை, கலப்பையில் இருந்தது. *எலியா* அவன்மேல் தன் சால்வையைப் போட்டவுடனே, அவன் தன் மாடுகளைவிட்டு *எலியாவின்* பிறகே ஓடி: நான் என் தகப்பனையும் தாயையும் முத்தம் செய்ய உத்தரவு கொடும், பின்பு உம்மைப் பின் தொடருவேன் என்றான். அப்படியே *எலிசா* வீட்டுக்குப்போய் தேவ அழைப்பினிமித்தம் மகிழ்ச்சியான விருந்து செய்து, **தாமதியாமல் எலியாவுக்குப் பின்சென்றான்.** அந்த வாலிபர்களும், எலியாவின் காரியமும் ஒன்றல்ல! *எலிசா*, எலியாவினிடத்தில், தானே வலியவந்து நான் உம்மைப் பின் செல்லுவேன் என்று சொல்லவில்லை. *எலியா* திடீரென்று **அழைத்ததினாலே பின்சென்று** தகவல் கூறிட தீவிரம் கொண்டான்!

ஆனால் இவனோ, ஆண்டவரிடத்தில் தானே வந்து: உம்மைப் பின் செல்லுவேன், ஆகிலும் முந்தி வீட்டுக்குப்போய் வழியனுப்பிக்

*கொள்ள உத்தரவுகொடும் என்று கேட்டான்.* **போனால் வரமாட்டான் என்பது ஆண்டவருக்குத் தெரியும்.** *அவர் மனுஷர் உள்ளத்தையும் நோக்கங்களையும் திட்டமாய் அறிந்திருந்தபடியால் விட்டுவிடுகிறார்! பின்பற்றத் திகைக்கிறவர்களைத் தைரியப்படுத்திச் சேர்த்துக் கொள்ளவும் செய்கிறார்!*

**நம்மை இன்னாரென்று திட்டமாய் அறிந்திருக்கிற ஆண்டவருக்கு, ஒருவன் ஊழியக்காரராயிருப்பது எவ்வளவு பயபக்திக்குரிய காரியம். மனுஷருக்கென்று பார்வைக்குச் செய்கிற ஊழியம் கிறிஸ்துவின் ஊழியம் அல்லவே!**

*நம் எஜமான், உலகத்தில் செய்யவந்த வேலை மகா பெரிது. அவருக்குப்பின் அது நடந்தேற வேண்டுமானால் அவருக்குச்* ***சீஷர்கள்*** *தேவை! அநேக சீஷர்கள் அவரைப் பின்சென்ற போதிலும், எல்லோரும் பிதாவின் பரமநோக்கத்தை இந்த உலகில் நிறைவேற்றி முடித்திட உதவமாட்டார்கள் என்பதை இயேசு அறிந்திருந்தார்! எல்லாரும் கடைசிவரை நிலைநிற்கவுமாட்டார்கள்! உண்மைதான், திரள் கூட்டமான சீஷர்களுக்கு பரம இரகசியங்களை விளக்கிக் காட்டுவது கடினம்! சீஷர்களின் தொகை எவ்வளவுக்கு சுருக்கமாயிருக்குமோ, அவ்வளவுக்கு அது நல்லது! விலையேறப்பெற்ற பரம பொக்கிஷத்தை ஒப்புவிக்கத்தக்க* ***உண்மையுள்ள சீஷர்களையே*** *இயேசு தெரிந்தெடுக்க வேண்டும்!*

அவர்கள் மாத்திரமே, உலகத்தில் தங்களுக்கு இலாபமும், மேன்மையுமாயிருப்பவைகளை 'குப்பையென' விட்டுப் பிரிந்து,தங்கள் ஆண்டவரை முடிவுபரியந்தம் பின்பற்றி நடப்பார்கள்! குருவின் அடிச்சுவட்டை, அடிபிறளாமல் பின்பற்ற துடிக்கும் சீஷர்கள் எங்கே? அங்கேதான்..... அவர்களைக் கொண்டுதான், இயேசு தன்னுடைய 'பாதாளத்தின்வாசல்களும் மேற்கொள்ள முடியாத' தன்சபையைக் கட்டுவார்!

*- பரமானந்தம் ஐயர்*

---

## 'அந்த முள்' கொடுக்கப்படாதிருந்தால்? 'கிருபை' இழந்திருப்பேன்!

*'பெலவீனனை' தாங்கும் அவரது வல்லமை*

**வி**சுவாச ஜெயத்திற்குரிய ஒரு முக்கியமான இரகசியத்தை பவுல் கூறினார்: "எங்களால் ஏதாவது ஆகும் என்பது போல ஒன்றை யோசிக்கிறதற்கு நாங்கள் எங்களாலே தகுதியானவர்கள் அல்ல, எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது" **(2கொரி.3:5)** என்பதேயாகும். மூன்று வகையாய் பிரிக்கக்கூடிய ஒரு வல்லமையான

*செய்தியை மிகச் சுருக்கமாக பவுல் இங்கே தெரியப்படுத்தியிருக்கிறார்: 1) எங்களுக்கு தகுதி இல்லை. 2) ஆகிலும், எல்லாவற்றிற்கும் போதுமான தகுதி உண்டு. 3) அந்த தகுதி கொண்டு, செயலாற்றும் வல்லமை பெற்றோம்! என நேர்த்தியாக கூறியுள்ளார்.* **முதல் வகைப்படி,** *இதுவே நமது ஆரம்பமாகவும் இருக்க வேண்டும். அந்த முதல் ஆரம்ப 40 வருடங்களில்,* **மோசே** *தன்னை 'தகுதி பெற்றவனாக காண்பித்திட' முயற்சி செய்தான்!* **இரண்டாவது வகையாக** *"தான் ஒன்றுக்கும் தகுதி இல்லை" என்பதை உணர்ந்து கற்றுக்கொண்டான்!*

**மூன்றாவது வகையாக, தன்னுடைய அடுத்த 40-வருடங்களை "தன் தகுதியற்ற நிலையை கற்றுக்கொண்ட ஒரு மனிதனைக் கொண்டு, தேவன் எவ்வளவு வல்லமையாய் செயல்படுகிறார்" என்பதை விளங்கச் செய்தான்!**

*"எங்கள் தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது" என்ற இரண்டாவது பகுதியே மிக முக்கியமானதாய் சொல்லப்பட்டிருப்பதைப் பாருங்கள். ஒன்றை இழக்க அனுமதித்ததின் தொடர்ச்சியாய், ஒரு அரிய வல்லமையை பற்றிக்கொள்ள வேண்டும்". அதாவது,* ***"ஒன்று போகட்டும்! தேவன் செய்யட்டும்!"*** *என்பதே நம்முடைய ஜீவிய முழக்கமாய் இருக்க வேண்டும். 'முற்றிலும் அர்ப்பணித்தேன்' என்ற நிலையை தாண்டி 'தேவ பெலனை பிடித்துக்கொண்டேன்' என்பதே நம் கிறிஸ்தவ ஜீவியத்தின் மேன்மை!*

*இப்போது, நாமும் அப்போஸ்தலனாகிய பவுலைப் போலவே எல்லாத் தாழ்மையோடும் "எங்களையும் புதிய உடன்படிக்கையின் ஊழியக்காரராய் இருக்கும்படி, அவரே எங்களை தகுதியுள்ளவர்களாக்கினார்" (2கொரி.3:6) என அறிக்கை செய்வோமாக! ஆகவே இனிமுதற்கொண்டு நாம் 'பெலவீனமடைய' எந்த உரிமையும் இல்லை! 'தோற்றுப்போயிட' இனி யாதொரு காரணமும் இல்லை! இனிமுதல், 'ஒரு பெலவீனத்தை' மாயமான தாழ்மையாகக் கொண்டு தேவனை கனப்படுத்தலாம் எனவும் எண்ணிவிடக்கூடாது! ஆகவே, நாம் யாவரும் எழுந்து நின்று செய்திடும் அறிக்கை என்னவென்றால்: "தேவனுக்காக பெரிய காரியங்களைச் செய்திட முன்னோக்கிச் செல்வோமாக! தேவனிடமிருந்து பெரிய காரியங்களை எதிர்பார்போமாக!" என்பதேயாகும்.*

*கர்த்தருடைய சர்வ வல்லமையை விளங்கச் செய்யும் ஒரு வாசகம் 2கொரிந்தியர் 12:9-ம் வசனத்தில் ஓர் அளவில்லா அனுபவ சித்திரமாக சித்தரிக்கப்பட்டுள்ளது. அந்த அனுபவத்தை பெற்ற பவுல் அந்த வாசகத்தை முழங்கினார்: "அதற்கு கர்த்தர்* **என் கிருபை உனக்குப்போதும்**" *என்றதே அந்த முழக்கமாகும். பவுல் அப்போஸ்தலன்*

*ஒன்றன்பின் ஒன்றாக அனுபவித்து கடந்துவந்த* **உபத்திரவங்களையும் துன்பங்களையும், கனமுள்ளதாய்** *அவர் ஏற்றுக்கொண்டு வாழ்ந்தபடியால் அவருடைய பரலோக அதிபதியான கர்த்தர், இந்த அற்புதமான வார்த்தையை அவருக்கு அருளிச் செய்து, அவருடைய ஜீவியத்தை அழகுபடுத்தினார்! இச்சமயத்தில், தனக்கென்று ஒரு மகிமை தேவைப்படுமென்றால் "என் பெலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்" என்றே அறிவித்து கர்த்தரை பணிந்து கொண்டார். இவையெல்லாம் நடந்து முடிந்த பின்பே 'ஓர் புதிய விநோதமான செய்தி' அவருக்கு தெரியப்படுத்தப்பட்டது. முதலாவதாக அந்த செய்தி சகிக்கக்கூடாததாயிருந்தபோதிலும், அவருக்கு கிடைத்த அந்த மனவேதனை தந்த செய்தி என்னவென்றால், நான் கடந்து சென்ற பாதை "சாத்தானுடைய தூதனாயிருந்தது" என்பதை கண்டு கொண்டார். பாதாளத்தின் வாசலிலிருந்து புறப்பட்டு வந்த இந்த துன்பம் அக்கினியைப் போல் எழுந்து வந்து அவருடைய ஆத்துமாவை சுட்டெரித்தது! இந்த துயரம் தன்னைவிட்டு நீங்கும்படி "மூன்றுதரம் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டார்!" (2கொரி. 12:7,8). அவர் ஜெபத்திற்குப் பதிலாக, கர்த்தர் சொன்னது என்னவென்றால், இவ்வித பாதாள வாசலிலிருந்து வரும் துன்பத்திற்கும், "என் கிருபை உனக்கு போதும்" என அறிவித்ததேயாகும்! அந்த பாதாள வாசலிலிருந்து புறப்பட்டு வந்த துயரத்தை கர்த்தர் ஒருவேளை அகற்றி இருந்தால் 'தேவனிடமிருந்து அவருக்கென்று வந்த விசேஷத்தை' பவுல் இழந்திருப்பார்! அதை பவுல் "என்னைத் தொட்ட கிறிஸ்துவின் வல்லமை" என மனம் பூரித்தார்.*

> ஒரு முள் கொடுக்கப்படாதிருந்தால்? சாத்தானின் தூதனுடைய குட்டுதல் ஏற்படாதிருந்தால்? பவுல், கர்த்தரின் தொடுதலை உணர்ந்திடும் வல்லமையை பெற்றிருக்க மாட்டார்!

*இவ்வாறு பவுல் பெற்ற ஜெயம், வான் உயர எதிரொலித்தது! அது என்னவென்றால் "ஆகையால்,* **கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி** *என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுகிறேன்" என்ற எதிரொலிப்பேயாகும். ஓர் கொடிய யுத்தத்தின் இரைச்சலுக்குப் பின்பு "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு எப்பொழுதும் ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்!" என்ற ஜெயத்தின் வெற்றி முழக்கம், பவுலுக்கு மாத்திரமல்ல, நம் யாவருக்கும் உண்டாவதாக! ஆமென்.*

*- A.B.சிம்ஸன்*

## 'சிலுவைப் பாதையை' மனுஷீக அன்பு அடைத்திட மறுத்திடுங்கள்!

*மகிமை முடிசூட்டும் சிலுவை பாதை*

*துன்பத்தின் வழியில் 'பரத்தின் நன்மைகளை' நான் ஏராளமாய் ருசித்த போதும், இதற்கு நேர்மாறான சிந்தைகளும் என்னை பாதித்தன. எப்படியெனில், ஆசிரமத்திலுள்ள சகோதரிகளில் நல்ல சகோதரிகள் சிலர் இருக்கிறார்கள். தாங்கள் ஆசிரமத்தில் வாழ்வது 'கர்த்தருடைய பெரிதான கிருபை' என மகிழ்ந்து நன்றியோடு வாழ்ந்தார்கள். அவர்களின் மிகுந்த நன்றியினிமித்தம், எந்த பணியையும் மனதார செய்து முடிப்பார்கள். இச்சமயத்தில், அவர்களுக்கும் என்னைப் போலவே நிந்தைகள் பல நெருங்கின. என் உள்ளத்திலிருந்து நான் உடனடியாக எண்ணிய எண்ணமெல்லாம்* **"இத்தனை அன்பான இந்த சகோதரிகளுக்கு எப்படி நிந்தை வரலாம்?" என உள்ளம் பதறினேன்.** *இந்த நேரத்தில்தான் ஆண்டவர் என்னோடு இடைப்பட்டார்:*

> **"மகளே உனக்கு நேரிட்ட நிந்தை வழியாய் கல்வாரி அன்பை பற்றிக் கொண்டு, என்னை அதிகமாய் கிட்டிச் சேர்ந்தாய்! அதுபோன்ற பாக்கியம் இவர்களும் பெற வேண்டுமல்லவா?" என உணர்த்தினார்.**

*என்னுடைய 'மானிட அன்பை வைத்து' எனக்கு அருமையான வர்களுக்கு சிலுவையின் பாடுகளை வரவிடாமல் தடுக்க நினைத்த என்னுடைய மாம்சசிந்தைக்காக துயருற்று, என் அன்புக்குரியவர்களுக்கு கல்வாரி அன்பின் வழியை தொடர்ந்து, ஆர்வமுடன் காட்டினேன்!*

*- ஏமி கார்மைக்கேல்*

---

## 'சூளை நெருப்பிலும்' ஓங்கிநிற்கும் விசுவாசம்!

*ஒரு முடியும் கருகாமல் காத்திடும் கர்த்தர்*

*பேதுரு கூறும் புத்திமதியில் "உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து ஏதோ புதுமை என்று திகையாமல்... அதனிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவோம்" எனக்கூறினார் (1பே4:12-16). நாம் தேவனை மகிமைப்படுத்த வேண்டிய முக்கியமான ஒரு இடம்* **"நம் மத்தியில்"** *எரிந்திடும் அக்கினியாகவே இருக்கிறது!*

*எத்தனையோ அக்கினியான சோதனைகளில், அக்கினிப் பிளம்பு தன் தாசர்களைத் தீண்டிட தேவன் அனுமதித்ததில்லை! இருப்பினும், அநேக சமயங்களில் அக்கினி அவர்களை கடுமையாய் தாக்கியிருக்கிறது. ஆனால், இதுபோன்ற நேரத்தில்தான் நம்முடைய விசுவாசம் சோதிக்கப்படுகிறது.*

*இதைவிட மேலாய், நாம் இதுவரை தேவனுக்கு புகழ்ச்சியாய்*

*வாழ்ந்ததைவிட "பற்றியெறியும் இந்த அக்கினியில்" தேவனுடைய நாமம் மிக அதிகமாய் மகிமைப்படப்போகிறது என்பதை நாம் விசுவாசித்திருக்க வேண்டும்!*

**பெரிதாய் பற்றியெறியும் அக்கினிக்கு பெரிதான விசுவாசமே தேவைப் படுகிறது! குறைவான விசுவாசம் அங்கே தோற்றுப்போகும். ஆம், அக்கினி சூளையில்தான் நமது ஜெயம் நிலைநாட்டப்பட வேண்டும்!**

*ஒரு மனிதன் தன் துன்ப நேரத்தில் விளங்கச் செய்திடும் பக்தி வைராக்கியத்தை, வேறு எதிலும் அவன் காட்டிட இயலாது! அக்கினி சூளைக்குள் போடப்பட்டவர்கள் கொஞ்சமும் பிசகு- நசலின்றி வெளியே வந்து விட்டார்களே! இதுவே பக்தனின் இரகசியம்! அவனுக்குள் ஒரே ஒரு மாற்றம்தான் நிகழ்ந்தது..... கையில் கட்டப்பட்டு உள்ளே போடப்பட்டார்கள்! வெளியே வரும்போது கட்டு அவிழ்ந்து வந்தார்கள்!! இப்படித்தான்அநேக சமயங்களில், அக்கினி சூளையில் தேவன் தன் மகத்துவத்தை விளங்க பண்ணுகிறார்:*

> *அவர்கள் பக்கத்தில் சென்று பாருங்கள்.... அவர்கள் சரீரத்தில் காயத்தின் வடு சிறிதேனும் இல்லை! அவர்கள் உடம்பில் கொப்பளங்களும் இல்லை! அவர்கள் முடிகூட கருகவில்லை! அவர்கள் ஆடை பொசுங்கவுமில்லை! நெருப்பின் கருகல் வாசனை கூட அவர்கள் மீது வீசவில்லை! இவ்வாறுதான் எந்த ஒரு உத்தம கிறிஸ்தவனும் அக்கினி சூளையான உபத்திரவங்களைக் கடந்து வெளி வரவேண்டும். கட்டுகள்தான் அவிழ்ந்தன! ஆனால் நெருப்போ அவர்களைத் தொட முடியவில்லை! இதுவே கிறிஸ்துவானவர் அடைந்த ஜெயத்திற்கு ஒப்பானதாகும்! ஆம், "அவைகளின் மேல் சிலுவையிலே அவர் வெற்றி சிறந்தார்!" என்பதே, அந்த ஜெய கெம்பீரம் (கொலோ.2:15) .*

*இதுவன்றோ மெய்யான ஜெயம்... வியாதிப்பட்டாலும் அங்கேயும் ஒரு ஜெயம்! மரித்துக் கொண்டிருந்தாலோ அல்லது மரணமே அடைந்தாலோ அங்கேயும் ஒரு ஜெயம்! எதிரும் புதிருமான சூழ்நிலை மத்தியிலும்* **"ஒரு வல்லமை" உங்களுக்கு ஜெயம் தரும்** *என்பதை விசுவாசியுங்கள். நாம் சென்றடைய வேண்டிய வான்சிகரங்கள் காத்திருக்கின்றன. தேவனை மகிமைப்படுத்தும் அந்த உச்சிக்கு சென்ற பின்பு, திரும்பிப் பாருங்கள்! அப்போது, நீங்கள் கடந்து வந்த பாதையைக் கண்டு வியப்படைந்து, ஜெயத்தின் பாடல்களை உங்கள் நாவு தானாகவே பாடிவிடும்!!*

*இந்த ஒப்பற்ற நிலையில், நம்மை காணும் மற்றவர்கள் "இவன்*

*ஐசுவரியவான் என வியப்பார்கள்! ஆனால் உண்மையில் நாமோ, தரித்திர பாதையில் கடந்து வந்தவர்கள்.... அந்த தரித்திரத்தினால் மற்றவர்களை ஐசுவரியவான்களாய் மாற்றுகின்றவர்கள். இங்கேதான் நமது வெற்றியின் இரகசியம் புதைந்து கிடக்கிறது! தாழ்விடத்தில்தான் கிறிஸ்து ஜெயம் பெற்றார். மற்றவர்களுக்கு என்னவோ அது இழிவாய் இருக்கலாம்! ஆனால், கிறிஸ்துவைப் போல 'அதுவே'நமக்கும் ஜெயம்!*

*ஒரு மனுஷன் எண்ணற்ற உபத்திரவங்களைச் சுமந்து கொண்டு வந்தும் "அவன் இருதயத்தின் கிண்-கிணி மணி ஓசையை" ரீங்காரமாய் நாம் கேட்கும்போது, அந்த காட்சி நம் உள்ளத்தை கொள்ளை கொள்ளாதோ? சோதனை உச்சக்கட்டத்திற்குச் சென்ற ஒருவன், முற்றிலும் ஜெயம் பெற்றவனாய் திரும்ப வருவதைக் காண்பது, கண்கொள்ள காட்சியன்றோ! சூடு-பாலைவனத்தையும் ஊடுருவச் சென்ற ஒரு யாத்ரீகனின் உடல், சற்று துவண்டது போல் தோன்றினாலும், உடைபடாத அவனது சகிப்புத் தன்மை நமக்குப் புத்துணர்வு ஊட்டுகிறது அன்றோ! ஆ, இந்த அதிசயங்கள் அவரது கிருபைக்கே நிலைத்திருக்கும் சாட்சியும், புகழ்ச்சியும் ஆகட்டும்!*

*இந்த மண்ணின் ஆதாரம் யாவும் இழந்தும்!*
*இரைச்சலான சமுத்திரம் போலவே ஆனாலும்!*
*இளைப்பாறுதல் அமைதி கொண்டவன் இவனென்று....*
*இறைவன் பாதுகாத்திடும் அதிசயம் இவனென்று....*
*இயேசுவுக்கு புகழ் சேர்க்கும் மாந்தரில், நானும் ஒருவன்தானோ?*

*- கிறிஸ்டோசன்*

---

## 'சுதந்திர இந்திய மண்ணில்' ஓர் விசுவாச சூளுரை!

*இது, ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஏற்க வேண்டிய சவால்*

இந்தியாவின் ஒரிஸா மாநில மிஷனெரி *கிரஹாம் ஸ்டெய்ன்ஸ்* "கர்த்தருக்கு சுகந்த பலியான" அந்த நாளில், கிளாடிஸை சூழ நின்ற அனேகர் "இனி நீங்கள் இந்தியாவை விட்டுவிட்டு ஆஸ்திரேலியாவிற்கே திரும்பிச் செல்ல யோசித்திருப்பீர்கள் அல்லவா?" எனக் கேட்டனர். அதற்கு *கிளாடிஸ்* "ஒருக்காலும் இல்லை! என் கணவரும் என் பிள்ளைகளும் தங்கள் ஜீவனை, **இந்த தேசத்திற்கே** தியாகம் செய்திருக்கிறார்கள்! எனக்கு மாத்திரம் வேறிடமா? இந்தியாவே எனது வீடு! இங்கிருப்பதே எனக்கு மகிழ்ச்சி!" எனக் கூறினார்.

**மேலும் கூறுகையில், எந்த உத்தம கர்த்தருடைய ஊழியர்களும் தங்கள் முழுமையும் அர்ப்பணித்து "சுகந்த வாசனையான பலியாய் ஊழியம்**

செய்யவே'' அழைக்கப்பட்டிருக்கிறார்கள். எந்த விதத்தில் அவர்கள் அழைக்கப்பட்டிருந்தாலும், தன்னை அழைத்தவருக்கே உண்மையுள்ள வர்களாய் இருக்க வேண்டும்! கொடிய துன்புறுத்துதலிலும் அல்லது பயமுறுத்துதலிலும் கலங்கிப் போய் ''திரும்ப சென்றுவிடு'' என்ற சோதனைக்கோ அல்லது ''விட்டுவிடு'' என்ற சோதனைக்கோ ஒருபோதும் இணங்கிவிடக் கூடாது! மேலும் கிளாடிஸ் கூறும்போது ''கூடி இருக்கும் அனைவருக்கும் நான் சொல்ல விரும்பும் செய்தி என்னவெனில், நான் கசந்து போகவில்லை! யார்மீதும் கோபமாய் இல்லை! கொலையாளிகளின் அனைத்து வன் செயல்களையும் நான் மன்னிக்கிறேன்! ஆகிலும் அவர்களது பாவங்களையோ இயேசு மாத்திரமே மன்னித்திட முடியும். அதற்கு அவர்கள்தான் இரட்சக பெருமானிடம் கேட்க வேண்டும்! என் உள்ளத்தில் பற்றியெரிந்து கொண்டிருக்கும் விருப்பம் ஒன்றே ஒன்று தான்: ''இந்தியாவின் ஒவ்வொரு குடிமகனும், அவனுடைய அல்லது அவளுடைய பாவங்களுக்காகத் தன்னையே பலியாக தந்து விட்ட இரட்சக பெருமான் இயேசு கிறிஸ்துவிடம் ஓர் தனிப்பட்ட அன்பான உறவை பெற்றுக் கொள்ள வேண்டும்! இயேசு அவனை அல்லது அவளை நேசிக்கிறார் என்பதை ஒவ்வொரு இந்தியரும் அறிந்து கொள்ள வேண்டும்! அவரது அன்பிற்கு ஈடாக, முழு உள்ளமாய் அவரை நம்பியிருக்கவும், ஒருவரையொருவர் அன்புகூரவும் தீர்மானித்திடவேண்டும். 'பகை' ஒன்றே தீ கொளுத்தப்படட்டும்! கிறிஸ்துவின் அன்போ சுடர் ஒளி பிளம்பாய் பற்றிப் படரட்டும்! '' என கேட்பவர் நெஞ்சங்கள் அதிர கூறினார்.

*- கிளாடிஸ் ஸ்டெய்ன்ஸ்*

---

## 'ஆத்தும வாஞ்சை' இயேசுவின் இதய துடிப்பு!

*சுவிசேஷம் அறிவித்திட 'நெருக்கி ஏவும்' தெய்வ அன்பு*

ஆன்மீக இருட்டில் இருப்போரைக் குறித்த கரிசனை இயேசுவை வெகுவாய் எப்போதும் அழுத்திக்கொண்டிருந்தது. நாசரேத்துதான் அவரது சொந்த ஊர்! அவரது உற்றார், உறவினர் அங்குதானிருந்தனர்! ஆனால் அவரோ, தரிசனத்துடன் நாசரேத்திலிருந்து நப்தலிக்கு சென்றார். ஏசாயா புத்தகத்தின் ஒரு தீர்க்கதரிசன வசனத்தை மேற்கோள் காட்டி, மத்தேயு அதை இவ்விதம் எழுதுகிறார்:

> ''காரிருளில் இருந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள். சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் அங்கிருந்த குடியிருப்போர்மீது சுடரொளி உதித்தது'' என்றே வாசிக்கிறோம் (மத்.4:13-16).

*உலகின் அனைத்து இனங்களுக்கும் ஆசீர்வாதமாயிருக்கும் படியல்லவா ஆபிரகாம் தனது சொந்தவூரை விட்டுப்*

*புறப்பட்டார்! ஆபிரகாமின் குமாரனும் அதேபோல் பாரத்தை பெற்றதையும் காண்கிறோமே! இயேசு ஓர் யூதனாயிருந்தும், யூதரல்லாதோரைக் குறித்தும் அவரது இதயம் பாரங்கொண்டதே! மந்தைக்கு வெளியே இருப்போர் மீதே எப்பொழுதும் அவர் கரிசனை கொண்டு, அவர்களும் ஒரே மந்தைக்குள் சேர்க்கப்பட ஜெபித்தாரே! கப்பர்நகூமில் சுகமளிக்கும் அற்புதங்கள் நிகழ்ந்த பின்னர், அவர் வனாந்திரமான ஓர் இடத்திற்கு ஜெபத்திற்காய் தனித்துச் சென்றிருந்தாலும், மக்கள் அவரைத் தேடிச் சென்றனர் (மாற்கு 1:34-37). அவரோ தமது சீடரைப் பார்த்து, "நாம் அடுத்த ஊர்களுக்கும் போவோம், வாருங்கள். அங்கும் நான் நற்செய்தியைப் பறைசாற்ற வேண்டும்; இதற்காகவே நான் வந்திருக்கிறேன்" என்றல்லவா கூறினார். (வச.38). மக்களது தேவைகளைச் சந்திக்க அவர் நாசரேத்தை விட்டு கப்பர்நகூமிற்கு வந்தார்! இப்பொழுது கப்பர்நகூமை விட்டு மற்ற ஊர்களுக்கு விரைகிறார்! ஆத்துமாக்கள் மீது அவருக்கிருந்த பரிவுணர்வே அவரை இவ்விதம் துரத்திற்று.*

அவரைப்போல் "ஒன்றுமில்லாத மக்கள் மீது" கரிசனை கொள்ளாமல், நற்செய்தி திரும்பத் திரும்ப அறிவிக்கப்பட்டுள்ள, நமது வசதிக்கேற்ற எல்லைக்குள்ளேயே தங்கிவிடுகிறோமே! சுவிசேஷ ஆசீர்வாதங்களை திரும்பத் திரும்ப பெற்றுள்ள மக்களது வற்புறுத்தல்களுக்கு இணங்கிவிடாது, வறண்ட நிலங்களையே ஆண்டவர் நாடிச் சென்றார் (லூக்.4:42,43). "இந்தத் **தொழுவத்தில் இல்லாத வேறே ஆடுகள்** எனக்குண்டு; அவற்றையும் நான் கொண்டுவர வேண்டும்" என்பதே நல்ல மேய்ப்பரான அவரது துடிப்பு! (யோ.10:16). **"நமக்கு" என்பது "பிறர்க்கு" என்று மாற வேண்டும்! இதைத்தான் ஆத்தும வாஞ்சை என்கிறோம்.**

ஆண்டவர் தமது முதல் அழைப்பிலேயே, அவரது ஆத்தும வாஞ்சை எனும் சால்வையைத் தமது சீடர்களுக்கும் வழங்கினார்! அவரது நேரடியான அழைப்பை கவனியுங்கள்: "என் பின்னே வாருங்கள்; உங்களை மனிதரைப் பிடிப்போர் ஆக்குவேன்" (மத்.4:19) என்றார். தம்மைப் பின்பற்றும் ஒவ்வொருவரும், **இயேசுவைப் பின்பற்ற விரும்பும் மற்றவர்களையும் சேர்க்க வேண்டும் என்பதே அவரது வாஞ்சை!** அவரது சீடர் ஒவ்வொருவரும் 'அழைப்பு பெற்ற' முழுநேரப் பணியாளராகவோ, தன்னார்வ பகுதிநேரப் பணியாளராகவோ, ஆத்தும ஆதாயம் செய்கிறவர்களாய் இருக்க வேண்டும் என்பதே அவரது சித்தம்! இதில் சோம்பேறித்தனத்தையோ, வேறு எந்த சமரசத்தையோ அவர் சகிக்கவே மாட்டார்!

*- R.ஸ்டான்லி BYM*

## "கிறிஸ்தவ வாலிபர்களுக்கு ஓர் தீப்பிழம்பு!"

# ஹென்றி மார்டின்!



மிகக் குறைந்த தன் 31-வயதில் மரித்த இங்கிலாந்து தேசத்து ஹென்றி மார்ட்டின், கிறிஸ்துவின் உத்தம சீஷனாய் வளர்ந்து, இந்திய மிஷனரியாய் "உருது மொழி புதிய ஏற்பாட்டை" மொழிபெயர்த்து உருது மொழி மக்களுக்கு வழங்கினார் என்பதை நம்மால் நம்பவே முடியாத வியப்பாயிருக்கிறது! தன் இளைய தங்கை 'சாலி' மூலமாக இரட்சிக்கப்பட்ட இவர் "நான் பரத்திலிருந்து பிறந்தவன்" என அகமகிழ்ந்து கூறுவார். வேதத்தையும், நிரூபித்து வாழ்ந்த பக்தர்களின் சரித்திரத்தையும் ஆர்வமுடன் படித்த இவர், தன் கிறிஸ்தவ ஜீவியத்தில் துடிப்பும் கண்விழிப்பும் கொண்டவராய் இருந்தார். அவர் எழுந்து பிரசங்கித்த போதெல்லாம் "குறுகிய கால ஜீவிய அவசரத்தையும், நடைமுறை வாழ்க்கையையும்" அதிகமாய் வலியுறுத்தியது!

அவர் பிரசங்கித்த காலத்தை "மரித்துக்கொண்டிருக்கும் ஒரு மனிதன், மரணத்தை எதிர்கொள்ளும் மனுக்குலத்துக்கு பிரசங்கித்ததாகவும்" ஒருவேளை "இதுவே என் கடைசி பிரசங்கம்" என்பதாகவும் கொண்டிருந்த தெய்வபாரம் அனேகரை சவாலூட்டியது! பாருங்கள், கேம்பிரிட்ஜ் ஆலயத்தில் தன் 21-ம் வயதிலேயே உதவி போதகராய் மாறிவிட்டார்! ஆனால், சில வருடங்களுக்குப் பிறகு 'மிஷனரிப் பணிக்கு' அர்ப்பணித்து, வில்லியம் கேரி சென்ற கல்கத்தா பட்டணம் சென்றார்! தங்கை சாலி "அண்ணா, போக வேண்டாம்" என கூறியதை மறுத்து, ஹென்றி கூறியது என்ன தெரியுமா? "முன்பைவிட இப்போது தீவிரமாய் சுய-வெறுப்பின் ஜீவியமே என்முன் இருக்கிறது! அதற்கு இந்த மிஷனரி பணியே எனக்கு ஏற்றது! நான் உயர ஏற வேண்டும்! தாழ இறங்க வேண்டும்! ஓட வேண்டும்! வாழ்க்கை போராட்ட மல்யுத்தம் புரிய வேண்டும்" என்ற தன் இருதய ஆசையை கூறினார். சிறந்த பரிசுத்தவான்களின் புத்தகங்களை பேரார்வத்துடன் படிப்பார். அதில் 'ஜோனத்தான் எட்வர்டு' என்னுடைய தலைசிறந்த தலைவர் என்றும், அவரை பரலோகில் கண்டு ஆனந்தமாய் கட்டிப்பிடிப்பேன் எனவும் கூறினார்.

அடுத்த முக்கிய தன் தலைவராக 'டேவிட் பிரைனார்டு' அவர்களை வைத்திருந்தார். அவர்களின் புத்தகங்கள் அவரை தியாக ஊழியத்திற்கு ஊக்குவித்ததாகக் கூறுவார்! தன்னுடைய 22-வது பிறந்த நாளில் அவர் கூறியது என்ன தெரியுமா? "இன்று என் பிறந்த நாள்! என் வருடங்களை திரும்பிப் பார்க்க வெட்கப்படுகிறேன்! ஆண்டவர் இயேசுவே, என்னை வஞ்சகமான ஓய்விலிருந்து காப்பாற்றும்! நான் சோம்பேறித்தனத்திற்கு இடம் கொடுப்பதைவிட சாவதுமேல்! உம்மோடு கொண்ட பொருத்தனைகளை பன்மடங்கு புதுப்பித்து மகிழ்கிறேன்! இனிவரும் ஆண்டுகள், உம் மகிமைக்காய் என் ஜீவியம் அதிக அர்ப்பணம் கொண்டதாகவே இருக்கட்டும்!" என விசுவாச எழுச்சியுடன் ஜெபித்தார்! அன்று அவர் எழுதி வந்த பத்திரிக்கையின் வரிகள், இன்றும் உயிரோட்டமாய் உள்ளது! தன் ஜீவிய, ஊழிய ஓட்டத்தின் இறுதி வருடங்களில் அவர் எழுதிய கவிதையில் "ஓ என் ஆண்டவரே! எனக்கு ஓர் பிரதான குறைசொல் உண்டு! அதுஎன்னவெனில், என் அன்பு பெலவீனமானது; தடுமாற்றம் உடையது; ஆகிலும் உம்மை அன்புகூர்ந்து போற்றி மகிழ்கிறேன்; ஓ என் விண்ணப்பம் கேளும்.... நான் உம்மை இன்னமும் அதிகமாய் அன்புகூர்ந்திட கிருபை எனக்குத் தாரும்!" என்றே தாழ்பணிந்தார்!

- நிரூபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்

## மோட்சானந்தத்தை புறக்கணிக்கும் மாந்தர் மனம் திரும்புவார்களாக!

நான் சில காலத்திற்கு முன்னர் ஒரு மனிதனைக் குறித்து இவ்விதமாக வாசித்தேன். அவன் வெகு சிறப்பாய், மின்னல் வேகத்தில் தன் குதிரையை ஓட்டிச்செல்லும் வீரன்! ஒரு அலங்கார விடுதியின் முன்பாக அவன் நின்று தனது குதிரையில் அவன் மிடுக்காக பெருமையுடன் ஏறிக்கொண்டிருந்தான்.

அந்த சமயம் அப்பட்டணத்திலுள்ள தேவாலயத்தின் உதவிக் குருவானவர் அவ்வழியே அவனைக் கடந்து நடந்து சென்று கொண்டிருந்தார். அவன் அவரைப் பார்த்து, சிறிதேனும் தெய்வ பயம் இல்லாமல், மிகவும் ஏளனமாக "நரகத்திற்கு இங்கிருந்து எவ்வளவு தூரம் உண்டு என்று உம்மால் சொல்லக் கூடுமா?" என்று கேட்டான். அந்தப் பரியாசக்காரனுக்குப் பதிற்கூறாமல் உதவிகுருவானவர் மனவேதனையுடன் தன் பாதையில் விரைவாகச் சென்று கொண்டிருந்தார். அவர் சென்று கொண்டிருந்த தெருவின் நாலு வீதி சந்திக்கும் ஒரு மூலைக்கு அவர் வந்து சேர்ந்தபோது, அங்கே ஒரு கூட்டம் மக்கள் குழுமி யிருந்தனர். அந்தக் கூட்டத்தின் மத்தியில் ஒரு வாலிபன் விழுந்து கிடந்தான். அவன் ஏறி சவாரி செய்த அவனின் குதிரை அவனைத் தூக்கி வீசவே அவன் பிடரி முறிந்து அங்கே செத்துக் கிடந்தான். "பாவம், சிறந்த குதிரை வீரன்! இப்படி இறந்து போனானே, என மக்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டார்கள். குருவானவரிடம் முதலில் நரகத்திற்குத் தூரம் கேட்ட நாஸ்திகன்தான் அந்த வாலிபன். ஒரு தெருவைக் கடந்து செல்லும் நேரத்திற்கு முன்பதாகவே சடுதியான அகால மரணத்தின் மூலமாக அவன் நித்திய எரிநரகத்துக்குக் கடந்து சென்று விட்டான்.

இன்று அநேக மக்கள் நித்தியத்திற்கடுத்த காரியங்களுடன் விளையாடி வருகின்றனர். அவற்றைக் குறித்து அவர்கள் பரியாசம் செய்து கேலியும் பேசி வருகின்றனர். பலகோடி ரூபாய் மதிப்புள்ள 'வைரகல்லை' தெருவில் வீசி விளையாடும் பையனைப்போலவே 'நித்திய மோட்சத்தை' அற்பம் என்றெண்ணி வாழும் மாந்தர்கள் மனம்திரும்பி வாழ ஆண்டவர் கிருபை செய்வாராக!

- சுவிசேஷ மலர்

சந்தா அனுப்ப QR பயன்படுத்தவும்

maduraichristianfellowship@indianbk

பரலோக பொக்கிஷங்கள்

Published and Owned by:
Madurai Christian Fellowship, Regd Society,
*Editor* T.Rathnakumar, Madurai.
Printed by SFA Print (P) Ltd., Sivakasi.